**கட்டுரையில் பொருத்தமான சொற்களை நிறைவு செய்க.**

**<u>தூய்மைக்கேடுகள்</u>**

______ என்பது சுற்றுச்சூழல் மற்றும் அதன் மூலம் மனித வாழ்க்கையின் மீதான பாதிப்புகளைக் குறிக்கின்றது. இவை பெரும்பாலும் மனிதர்களின் செயல்பாடுகளால் ஏற்படுகின்றன. தூய்மைக்கேடுகள் ______ , ______ மற்றும் ஒலியின் மூலம் மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றின் விளைவுகள் மிகவும் தீவிரமானவை.

காற்று தூய்மைக்கேடு ஏற்படக் காரணம் ______ எரிக்கப்படுவது, வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் வெளியிடும் ______ ஆகும். இந்தப் புகை காற்றில் கலப்பதால், காற்று மண்டலம் அசுத்தமாகிறது. இதனால், ______ தூய்மையான காற்று இல்லாமல் உயிரினங்கள் தவிக்கின்றன.

மேலும், கழிவுப் பொருள்கள் ஆற்றில், குளத்தில், கடலில் கலக்கப்படுவதால், நீரும் அசுத்தமாகிறது. இதுவே நீர் தூய்மைக்கேடு ஆகும். தூய்மைக்கேடு அடையும் நீரை ______ பயன்படுத்தும் போது பலவித நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

நகரங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ______ மிகுந்த ______ உருவாக்குகின்றன. இத்தகைய ஒலி மனிதர்களின் ______ ஆற்றலைப் பெரிதும் பாதிக்கின்றது. தொடர்ந்து எதிரொலிக்கும் பெரிய சத்தங்கள், குறிப்பாக வாகன ஒலிகள், மனிதர்களின் மனநலத்தையும் பாதிக்கின்றன. இதனால் மனஅழுத்தம், தூக்கமின்மை, உயர் ரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

புவியை நேசிக்கும் பண்பு அனைத்து ______ இருக்க வேண்டும். அப்போது தான் தூய்மைக்கேட்டைத் தவிர்க்க முடியும். உலகம் ______ இருந்தால் மட்டுமே உயிரினங்கள் சிறப்பாக வாழ இயலும்.

| | | |
|---|---|---|
| காற்று | குப்பைகள் | உயிரினங்கள் |
| சுவாசிக்க | தூய்மைக்கேடுகள் | வாகனங்கள் |
| தூய்மையாக | மனிதர்களிடமும் | கேட்கும் |
| புகைகள் | ஒலியை | நீர் |

LIVEWORKSHEETS